மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 79/2019</u>

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிதம்பரம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05.08.2024 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்தை 06.03.1961ல் நாச்சியாண்டிப்பண்டாரம் என்பவர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். கிரைய சொத்தானது தென்வடலில் 46 முழ நீளமும், கிழமேலில் 36 முழ அகலமும் கொண்டது என்றால் சரிதான். கிரைய சொத்தில் ஒரு ஓட்டுவில்லை வீடு இருந்தது என்றால் ஆமாம். அந்த வீட்டில் நாச்சியாண்டிப்பண்டாரம் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். நாச்சியாண்டிப்பண்டாரத்தின் ஒரே மகன் சுப்பண்ண பண்டாரம் என்றால் சரிதான்.

2. நாச்சியாண்டிப்பண்டாரம் 1980 வாக்கில் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். நாச்சியாண்டிப்பண்டாரம் இறந்த பிறகு சுப்பண்ண பண்டாரம் தாவா சொத்தில் இருந்த வீட்டில் வசித்து வந்தார் என்றால் ஆமாம். சுப்பண்ண பண்டாரத்துக்கு 2 மகன்கள், முதல் மகன் பெயர்

தண்டபாணி என்றும், 2ம் மகன் பெயர் சண்முகம் என்றால் சரிதான். மேற்படி சண்முகம் தான் தாவாவில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். சுப்பண்ண பண்டாரம் உயிருடன் இருந்தபோதே அவரின் மகன்களுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்பு சண்முகம் மற்றும் தண்டபாணி தனித்தனியாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

3. தண்டபானி வடபுறத்தில் இருந்த வீட்டிலும், சண்முகம் தென்புறத்தில் இருந்த வீட்டிலும் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். பொதுவில் தான் புழங்கி வந்தார்கள். தண்டபானிக்கு சிதம்பரம், பழனிச்சாமி, சரஸ்வதி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சண்முகத்திற்கு யார் யார் வாரிசுகள் என்றால் மகன் பழனிச்சாமி, மகள் சுலோச்சனா. தற்போது தண்டபானி இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அதற்கு முன்பே சுப்பண்ண பண்டாரம் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். சுப்பண்ண பண்டாரம் இறந்து 20 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும்.

4. தண்டபானி உயிரோடு இருந்தபோதே அவர் வசித்து வந்த வீட்டிற்கு அவர் தனியாக சொத்து வரி கட்டி வந்தார் என்றும் சொன்னால் சரிதான். நாங்கள் இருந்த வீட்டிற்கு என் அப்பா அவர் பெயரில் வரி கட்டி வந்தார். என் அப்பா குடியிருந்து வந்த வீட்டிற்கு அவர் பெயரில் தனியாக மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். என் அப்பா குடியிருந்து வந்த வீட்டிற்கு மின் கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் அவர் பெயரில் செலுத்தி வந்தார் என்றால் ஆமாம்.

5. மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு ஆகியவை வடபுறத்தில் உள்ள வீட்டிற்கு என் அப்பா செலுத்தி வந்தார் என்றால் சரிதான். தென்புறத்தில் இருந்த வீட்டிற்கு என் சித்தப்பா தனியாக வரி செலுத்தி வந்தார் என்றால் ஆமாம். வடபுறத்தில் என் அப்பா குடியிருந்த வீட்டை மட்டும் நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் இல்லை. தென்புறத்து வீட்டையும் சேர்த்து அனுபவம் செய்து வருகிறோம். தென்புறத்து வீட்டில் எங்களுக்கு எந்த அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. தென்புறமும் அனுபவம் செய்து வருவதாக நாங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல.

6. என் தாத்தா சுப்பண்ண பண்டாரம் இறந்ததற்கு பின்னிட்டு என் அப்பாவும் சித்தப்பாவும் ஊர் பெரியவர்கள் முன்பு பைசல் பேசி வாய்மொழியாக பாகப் பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. பொது மனிதர்கள் முன்பு பாகப்பிரிவினை செய்து கொண்டதால் தான் என் தகப்பனார் உயிரோடு இருந்த வரை பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வடபுறமும், எங்கள் சித்தப்பா குடும்பத்தினர் தென்புறமும் அனுபவம் செய்து வருகிறோம் என்றும் அதை மறைத்து நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. சண்முகம் குடியிருந்த வீடு பழுதாகி தற்போது புதிதாக கட்டிடம் கட்டப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் என் சித்தப்பா சண்முகம் பழைய வீட்டை இடித்துவிட்டு தார்சு வீடு கட்டியுள்ளார். அப்போது நாங்கள் தடுத்து நிறுத்த முயற்சி செய்தோம், ஆனால் கட்டி விட்டார். அந்த வீட்டிற்கு குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு ஆகியவை என் சித்தப்பா பெயரில் இருந்து அதை கட்டி வருகிறார்

என்றால் ஆமாம். பாகப்பிரிவினை நடக்கவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வழக்கு சொத்தில் நாங்கள் பொது சுவாதீனத்தில் இருக்கவில்லை என்றால் சரியல்ல.

8. 1ம் பிரதிவாதி தனது பெயரிலான மின் இணைப்பை தென்புறத்தில் மாற்றி வைக்க மின் வாரியத்திற்கு 1ம் பிரதிவாதி மனு கொடுத்தார் என்றால் சரிதான். அதை பரிசீலித்த மின் வாரிய அதிகாரிகள் அதை மாற்றி வைக்க அனுமதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கும், அ.வ.எண்.38/2020 வழக்கும் தள்ளுபடி ஆகத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2024.08.05 18:14:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்